பொருமையால் என்று நீங்கள் கனவிலும் நினைக்கவேண்டாம். உங்கள்மேல் வைத்த அன்பினுலேயே நாம் இப்படி உங்களிடத்தில் மோதிக்கொள்கின்ருேம். ஆகையால் போனதுபோக இனிமேலாகிலும் நீங்கள் சற்றே கண்திறந்து பார்த்து எங்கள்பேல் கருணைகொள்ளல்வேண்டும். ஆரியநண்பர்காள்! நீங்களும் இனி அயர்ந்து தூங்காமல் நன்ருக இவ்விஷயத்தில் முயலவேண்டும். படாதிபதிகளை நெருக்கவேண்டும். நாமும் ஒற்றுமையோடு ஒவ்வொரு காரியங்களைச்செய்தல்வேண்டும். சோம்பலேயும் லோபத்தையும் ஒழித்துவிடவேண்டும். பலதுளி பெருவெள்ளம் என்றதுபோல் நாம் பலர்கூடி முயல்வோமானுல் எதுதான் ஆகமாட்டாது. பாதிரிகள் இவ்விஷயத்தில் செய்யும் தந்திரங்களை யறியீர்களா? கிறிஸ்தவராயுள்ள ஒவ்வொருவரும் தவருமல் தங்கள் தங்களால் இயன்றளவு மதவிருத்தியின்பொருட்டு மாதந்தோறும் பாதிரிகளிடத்தில் கொடுக்கிருர்கள். பாதிரிகள் அப்படிச் சிறிதுசிறிதாக வாங்கியல்லவா இவ்வளவு பெரிய காரியத்தை முடிக்கிருர்கள். நாமும் அப்படியே செய்வோமானுல் எவ்வளவு இலேசாகும். இதுவிஷயத்தில் முன்வந்திருக்கின்ற இந்து டிராக்ட்டுசொஸைட்டியையே போதாரமாக வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம். அங்கங்குள்ள ஜனங்கள் கிறிஸ்தவர்கள் செய்வதுபோல் மாசந்தோறும் தங்களால் இயன்றளவு இந்துடிராக்டு சொஸைட்டிக்கு உதவி இன்னும் இன்னும் அதை மேலுமேலும் விர்த்திக்குக்கொண்டுவரலாம். எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாமென்றபடி நாம் நல்ல மதாபிமானத்தோடு ஒத்துநடப்போமேயானுல் இம்மை மறுமைச் சுகங்களைத் தப்பாமற் பெறுவோம்; நந்தேசமும் முன்னுக்குவரும்; நம் வைதிக சமயந் தழைத்தோங்கும்; ஈசுரகிருபை யுண்டாகும்; நாடெங்குஞ் செழித்தோங்கும். சொற்ப முயற்சியால் எவ்வளவோ பெருங்காரியங்கள் அநுகூலமாகத் தக்கதாயிருக்க நாம் சும்மா முன்போல் அயர்ந்து தூங்கலாகாது. பாதிரிகள் தந்தேசத்தைவிட்டு இங்குவந்து இவ்வளவு வேலைசெய்ய, நாம் பேடிகள்போல் சுமமாயிருக்கலாமா. இதரமதஸ்தர்களை நாமிந்துமதத்தவர்களாக்காவிட்டாலும் நமது ஜனங்களையேனும் நாம் காக்கவேண்டாமா? ஓம் படாதிபதிகளே! வித்துவசிகாமணிகளே! செல்வர்களே! வியாபாரிகளே! பிராமணோத்தமர்களே! மற்றுள்ள ஆரியசகோதரர்களே! மதவிஷயத்தில் அபிமானம் வையுங்கள்; இதுவரையில் இருந்ததுபோல் அயர்ந்து தூங்காதீர்கள். மதாபிமானத்தால் நாமெல்லாஞ் சீர்ப்பட்டு முன்னுக்குவந்து சுகமடையலாம். சாந்தத்தையும் நீதியையும் விரும்பிய நமக்கு அப்படியே நீதியாகிய செங்கோலைப்பிடித்த தயாளசீலராகிய அங்கிலேய கவர்ன்மெண்டை ஈசுரன் கிடைக்கச் செய்திருக்கிருர். அவ்வரசு தழைத்தோங்க நமது பரமேசுரன் நல்லருள் புரிய அவருடைய திருவருளைப் பிரார்த்திப்போமாக.

வாழ்கவந்தணர்வானவரானினம
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

இந்துமித்திரன்.

பிரம்மக்கியானபோதினி பத்திராதிபர் அவர்கட்கு விஞ்ஞாபனம்.

ஐயா,—யாம் ப்ரம்மவித்தியாவில் எழுதிய வினக்களுக்கு நீர் எழுதிய விடைகளைப் பார்த்தோம். வினு எவ்வளவோ விடையும் அவ்வளவேயளிக்கவேண்டுமென்னும் நியதியைக் கடந்தீர். 1-வது விடையில் "பிரம்மசமாஜம் பூர்வமஹரிஷிகளின் கருத்தாதலால்" என்பது அந்தவிடத்தில் அநாவசியகமாம. இங்ஙனமே சிலவிடங்களில் அநாவசியகமான விடைகள் தரப்பட்டன. இனி அளவுகடந்து விடைதராமலிருக்க மன்ருடுகின்ருேம்.

4-வது வினுவுக்கு விடைதராமல் சில வாக்கியங்களை வரைந்துவிட்டு, அதை எதில் சேர்த்துக்கொண்டாலுஞ் சேர்த்துக்கொண்டாலும் என எழுதிவிடுவது தகுதியன்று; தத்துவவிஷயமாக ப்ரம்மசமாஜிகளுடைய சித்தாந்தத்தை அறிய விரும்பியே வரைந்தமையாலென்க. எமது கருத்தையறிந்தினியேனும் நான்காவது வினுவுக்குச் சரியான விடையளிப்பீரென்று நம்புகின்ருேம்.

பிரமபுரவாசி.

[illegible] விக்ரயார்த்தி [illegible]

[illegible]	0	கஉ	0
[illegible]	0	க	0
[illegible]	0	க	0
[illegible]	உ	0	0
[illegible]	0	கஉ	0
[illegible]	0	அ	0
[illegible]	0	ச	0
[illegible]	0	எ	0
[illegible]	0	க	0
[illegible]	0	உ	0
[illegible]	0	உ	0
[illegible]	க	0	0
[illegible]	0	உ	0
[illegible]	0	கூ	0
[illegible]	0	க	0
[illegible]	0	0	சா
[illegible]	0	ச	0
[illegible]		0	சா
[illegible]	0	0	சா
[illegible]	0	அ	0
[illegible]	0	க	0
[illegible]	0	ரு	0
[illegible]	0	சா	0

Chidambaram:—Printed and Published for the proprietor at the Brahmavidya Press.

ப்ரஹ்மவித்யா.

பத்திரகிரயம்.
1-வருஷ 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவதல்லது ரூபா 1-க்கு அணு 1-சேர்த்துத்த பால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரொஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ‖ [illegible] ‖

ச-மபுத்தகம்] சிதம்பரம்:—, க அ கூ ௯ ஞ ஜனவரி மீ ௰ருஉ [இலக்கம் ௰

வதிகாவியய:

க- [illegible]

உ- [illegible]

ங- [illegible]

ச- [illegible]

ரு- [illegible]

சா- [illegible]

எ- [illegible]

இதி-
[illegible]

பத்தரிகாவிதானங்கள்.

க. பத்திரிகை வேண்டுவோர் பரம்மவித்தியா ப்ரொஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும.

உ. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேணடும்.

ங. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒர் பக்கத்தில் நலலமைகொண்டு சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெரு.

ச. கையொப்பக்காரர்கள் ஊர்பெயர்முதலியவற்றை நன்ருக எழுதியனுப்புதல்வேண்டும. வேறு ஊர்களுக்குப் போகநேரிடின அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

ரு. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

சா. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படமாட்டா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரொஸ்,
சிதம்பரம்

[illegible]

ஸூதசம்மிதா பிரகடனம்.

ஸ்காந்த மகாபுராணத்துள்ள ஆறுசம்மிதைகளுள் ஒன்றாய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைத சித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்ஹிதையென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்த விஷயமாம். நம் சைவசமயத்துள்ள எவ்விஷயங்களை அறியவிரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்துவிளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்த ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியசுவாமிகள் மேன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன்பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகளால் இயற்றப்பட்டிருக்கிறது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந்தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புஸ்தகம ஒன்று-ரூபா 5-க்குவிறகப்பட்டு வருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில் யாவர்க்கும் உபயோகமாம பொருட்டு அச்சிட்டு வருகின்றோம். நாம் முன் கையொப்பக்காரர்களுக்குக் குறித்த காலம் கழிந்துவிட்டமையால் இனி முன்பணமனுப்ப விருப்பமுள்ளவர்கள் ரூபா 3—0—0. அனுப்புதலவேண்டும்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர்கையொப்பக்காரர்களாகச்சேர்ந்து இதன் கிரயமாகிய ரூபா மூன்றையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம அனுப்புவோர்க்கு மாசம் 1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மீ வரையிலாவது அல்லது 16 மாசத்தின பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டு செய்து ஒரே தடவையில புத்தகமாக்கியாவது அனுப்பப்படும. 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம, 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம் இனாமாகக்கொடுக்கப்படும.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசது பெற்றுக்கொள்வதோடு, தமக்கு மாசந்தோறும சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்த புஸ்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தங்கருத்தைக் கடிதமூலமாகத் தெரிவித்தலும வேண்டும். எழுத்துக்கள் புதிதாக வார்த்தமைபற்றி நாம் முற்குறித்தகாலத்தில் வெளிப்படாது தடைப்பட்டது. இப்பொழுது அச்சடித்தொடங்கி வேலை நடந்துவருகிறபடியால்முதற்சஞ்சிகை இம்மாதக்கடைசியிலனுப்பப்படும். ஒரே முறையில் நூறு புஸ்தகங்கள் வாங்குவோர்க்கு விலை மேற்கண்டதற்கும் குறைந்த ரூபா இருநூறே.

கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர், சிதம்பரம்.

[illegible]

131-வது பக்கத்தொடர்பு.

இனி அவர் ஆரியர் பூஜாப்பிரதிமைகளை உதகரிக்கவேண்டுமானால் அது பிழைப்புவழியாய் ஒழியுமாதலின் அதை விட்டொழித்தார் என்பது உள்ளம். இனி ஆரியர் பிம்பங்கள் பிழைப்புக்கெனக் கொண்டவையுமல்ல; விற்பதற்குரியவையுமல்ல. இனி உலகத்தில் அக்காலம பிரதிமைகள் எல்லாம பிழைப்புக்கென ஏற்படுமாயின் முற்சூத்திரத்தில் "பிழைப்புக்குரியது" எனச் சொல்லவேண்டுவதனுவசியகம. பிழைப்புக்கில்லாப் பிம்பமின்மையால். ஆதலின் அப்பதம உபயோகித்த ஆசிரியர் பாணினியார் குறிப்பாய் அக்காலத்திற் பத்தியுடன் ஆரியர் பிம்பங்களை ஆராதித்துவந்தார்களென்பதை யெடுத்து விளக்கிக்காட்டினார் என்றறியவேண்டும். இனிப் பாஷியகாரரும மௌரியரை 'பிம்பவிக்கிரயிகள்'' எனவெடுத்ததும், அக்காலத்தாரியர் செய்யக்கூடாத 'பிம்பவிக்கிரயத்தை அவர் செய்பவர். ஆரியர் அவற்றைக் கடவுளின் பிரதிநிதியாய் ஆராதிப்பவர் என்று கருதியேயிருக்கின்றார். ஆதலினாற்றான் உரையாசிரியர்களும் "தேவப்பிரதிமைகளைச் செய்தல் மௌரியருக்குக் குலதருமம்'' என்றார்கள். ஆதலின் அக்காலத்தில் அர்ச்சைகளை விற்றல் வேதவிக்கிரயம்போன்ற குற்றம் என்பது பெறப்பட்டது. இதுவரையில் யாம வரைந்தது உண்மையை யேயன்றி வேறில்லை. அறிஞர்கள் புத்திவலியால் கண்டிப்பினும் கண்டிப்பார்கள். அதனால் எமக்குத் துயரம் யாதுமில்லை. யாம் "விக்கிரகாராதனம் வைதிகம்'' என வெகு ஆடம்பரமாய் ஸ்தாபிக்க வந்தோமில்லை. மற்று கண்டபிரமாணத்தை விண்டோம். இப்பொழுதும் "மாபாஷ்யகாலத்தில் பிம்பாராதனம் இல்லை'' என்பதை நம்போம். மற்றும் சொல்வது யாதெனில் "பிம்பாராதனம் வைதிகமல்லவென்று ஸ்தாபிக்கமுயன்றுமாபாஷ்யத்தில் பிம்பவிக்கிரயம் அவைதிகம் என்றும் பிம்பத்தைப் பிழைப்புக்கெனக்கோடல் அவைதிகம் எனவும் குறித்தவிடத்தைப் பிரமாணமாகக்கொண்டதும் அதற்கு ஓர்வழி பொருள்படுத்தியதும் யாதுபற்றியோவெனில் பற்பல பொருள்கள் விளங்கக்கூடிய சித்திரகாவியம்போன்ற மாபாடிய வசனத்தில் அவர்களுக்கு அவ்விதப்பொருள் தோன்றுவதும் குற்றமாகாது. யாம் எடுத்தோதிய வழியும் உரையாசிரியர் முராணுவழி உள்ளதேயன்றி வேறில்லை. இனி அவர்கள் "தர்சனோபநிடதத்தில்'' க்ஷேத்திரங்களைப்பற்றிக் குறித்திருப்பது ஆராய்ச்சியில் விக்கிராராதனத்திற்குபயோகப்படாது என்றும்அவை சொல்லுக்குப்பொருளல்லவென்றுமகுறித்ததை மற்றோரிடம் மறுப்போம். இங்கு தசோபநிடதங்களின் வேறாய உபநிடதங்கள் ஸ்ரீவேதவியாசமுனிவர் இயற்றிய பிரமசூத்தி

[illegible]

ரத்திற்கு விஷயமாகாமையானும் மதாசாரியர் உரையி டாமையானும், மற்றைய ஆசிரியர் ஒருவரும் எடுத்தோ தாமையானும் அப்பிரமாணம் என்று சொன்னதைமட் டில் மறுப்போமாக. இவர் இவைகள் கீதையைப்போல் உபசாரமாய் உபநிடதமெனப்படும் என்றனர். அது உப சாரோபநிடதமாயினும் முக்கியோபநிடதமாயினும் அதி ற்சொன்னது கீதாவாக்கியம்போலாவது அப்பிரமாணமா வதில்லை. சொன்ன யுக்திகளும் போதுமானவையல்ல. கீதை ஸ்ரீவேதவியாசர் திருவாக்காயினும், மதாசாரியர் உரைசெய்தும் மற்றவாசிரியர் கையாடியும் முக்கியோபநி டதமாகவில்லை. மகோபநிடதம் யஜுர்வேதத்தில் அவ் விதமில்லாவிடினும் உபநிடதமே. ஆதலின் ஏதுப்போலி களே அவைகள். மேலும் தசோபநிடதங்களின் வேருய் சுவேதாசுவதரோபநிடதம், கோபாலதாபினி, நரஸிம்ம தாபினீ, ஜாபால அதர்வசிரஸ் முதலிய பல உபநிடத ங்களுக்கு ஸ்ரீசங்கராசாரியர்முதலிய ஆசாரியர்கள் உரை செய்திருக்கிறார்கள். ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள்32- உபநிடதங்களுக்கு உரையிட்டனர். வேதங்களுக்குரை செய்த ஸ்ரீபட்டபாஸ்கரர் ருத்திரபாஷ்யத்தின் முகவுரை யில் "ஜாபால" "கைவல்ய" முதலிய உபநிடதங்களைப் பிரமாணமாக உதகரித்தார். ஸ்ரீமாதவாசாரியார் அதே விடத்தில் அவ்விரு உபநிடதங்களையும் பிரமாணமாகக் கொண்டோதினர். அங்ஙனம் வேதாந்ததேசிகர் முத லிய சிலர் விஷ்ணுபரத்துவம் சொல்லுமிடம் 'ஜாபால' 'நாராயண' 'மகோபநிஷத்' 'அதர்வசிரஸ்' முதலிய உபநிடதங்களைப் பிரமாணங்காட்டுகிறார்கள். தத்துவமு க்தாகலாபம் முதலிய புஸ்தகங்களில் அவ்விதங்காண லாம். இப்படி இன்னும் பல ஆசிரியர்கள் எழுதியிருக்கி றார்கள். ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த குருசுவாமிகளும் தசோ பநிடதங்களின் வேறான உபநிடதங்களைப் பிரமாணமாக ஒப்பியிருக்கின்றனர். இவ்விதமிருக்க ஆரியமதப்பிரதி ஷ்டைசெய்த ஆசாரியர் எவரும் தசோபநிடதங்களில் வேறான உபநிடதங்கள் அப்பிரமாணம் என்றாரில்லை. ஆபின் இது வேதாந்த மறியாதார் முன் கபடம். மற்ற விஷயங்கள் எவ்விதம் எழுதப்படினும் அது எம்மைப்ப ற்றி வந்தமையாலும் விஷயத்தைத் தொடாமையாலும் விட்டொழித்தோம். ஆதலின் இனியேனும் இதைமுற்றி லும் பார்த்து இழுக்கின்றிப் பிரதிபத்திரிகை யளிப்பார் களென மிக வணக்கமாய் அப்பண்டிதர் அவர்களைக்கே ட்டுக்கொள்ளுகிறேன்.

சிதம்பரவாசி,
ஸ்ரீசிவாசாரியார்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்
1வரு 2—12—0
6௸ 1—8—0
3௸ 0—14—0
1காபி 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை
மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்
BRAHMAVIDYAPATHRIKA.

௨௬-ம் இலக்கம்

பத்திராகிரயத்தைம ணியார்டராக வாவது ரு. 1-க்கு அணா 1. சே ர்த்து தபால் ஸேவிலா சுவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெ ஸ்மானேஜருக்கு அனு புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯வரு ஜூன்மீ ௧௩உ விரோதி வரு ஆனிமீ ௩உ

உ

[illegible]

[illegible]

உ

சுபமஸ்து.

சூதசம்மிதாப் பிரகடனம்.

ஸ்காந்த மகாபுராணத்துள்ள ஆறு சம்மிதைகளுள் ஒன் ருய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைத சித்தாந்த நெ றியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புக ட்டுவதாயுள்ளது இச்சூதசம்மிதையென்பது அறிஞர்கள் யாவ ரும் அறிந்தவிஷயமாம். நம் சைவசமயத்துள்ள எவ்விஷ யங்களை அறிய விரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறி யலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடு த்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந் தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் மேன்மைதாங் கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன் பெரு மை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்த தோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப் பட்டது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந் தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந் நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங் களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புஸ்த கம் 1- ரூபா 5-க்கு விற்கப்பட்டுவருகின்றது. அது தெலு ங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம்தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக் கிரந்த எழு த்தில் அச்சிட்டு யாவர்க்கும் உபயோகமாம்பொருட்டு மிகச் சொற்பவிலையாகிய 2-ரூபாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக் கின்றோம்.